www.tamilarangam.net

# தமிழக ஈழ நட்புறவுக் கழகச் சட்டதிட்டங்கள்

தமிழகமும் ஈழமும் தொன்று தொட்டு மொழியாலும் இனத்தாலும் பண்பாட்டாலும் நெருங்கிய தொடர்பு கொண்ட பகுதிகளாயிருப்பதாலும் இவ்விரு பகுதி மக்களிடையே ஏற்படும் நட்புறவுகள் இவ்விரு நாடுகளின் கலை, பண்பாடு போன்ற பல்வகை வளர்ச்சிகட்கு வழிகோலும் என்பதாலும் தமிழக ஈழ நட்புறவுக் கழகம் எனும் இவ்வமைப்பு, கீழ்க்காணும் சட்டதிட்டங்களைக் கொண்டு உருவாக்கப்படுகிறது.

## 1. பெயர்

இவ்வமைப்பு, "தமிழக ஈழ நட்புறவுக் கழகம்" என்று அழைக்கப்படும்.

## 2. நோக்கம்

(1) இரு நாட்டு மக்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் அவர்களிடையே நட்புறவு ஏற்படவும் அதன் வழியாக ஒற்றுமையுணர்வு வலுப்படவும் செயல்படுவது.

(2) சுற்றுலா, கலை இலக்கியக் குழுக்களைப் பரிமாற்றிக் கொள்வது.

## 3. செயல்முறைகள்

(1) கூட்டங்கள், கலந்துரையாடல், படிப்பகங்கள், இலக்கியக் கலைக்குழு, கண்காட்சி போன்றவை அமைத்தல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(2) இரு நாடுகளுக்கிடையிலான மாணவர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள் போன்ற பல பிரிவினரின் பரிமாற்றத்திற்கு ஏற்பாடு செய்தல்.

(3) இரு நாடுகளுக்கிடையே நூல்கள், தாளிகைகள், சுவடிகள் பரிமாற்றத்திற்குத் துணைபுரிதல்.

(4) இரு நாடுகளுக்கும் பொதுவான வரலாற்றுக் கூறுகளைப் புலப்படுத்தும் வகையில் நூல்கள், இதழ்கள் வெளியிடுதல்.

(5) இரு நாடுகட்குமிடையிலான தொன்றுதொட்ட உறவுகளை ஆய்வுவழி அறிவதற்கான வழிவகைகளைச் செய்தல்.

(6) இக் கழகத்தின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்காகப் பல பகுதிகளிலும் அமைப்புகளை உருவாக்கல் முதலிய தேவையான பிற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

4 உறுப்பினர்கள்

(1) கழகத்தின் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொண்ட 15 அகவைக்கு மேற்பட்ட இருபாலாரும் எழுத்து மூலமாக இசைவளித்துக் கட்டணம் செலுத்திக் கழகத்தில உறுப்பினராகச் சேரலாம்.

(2) உறுப்பினர்கள் நால்வகைப்படுவர்

(அ) புரவலர்
(ஆ) வாழ்நாள் உறுப்பினர்
(இ) நன்கொடை உறுப்பினர்
(ஈ) அடிப்படை உறுப்பினர்

(3) ஆயிரம் உருபா அல்லது அதற்குமேல் அளிப்பவர்கள் புரவலர்களாகவும் நூறு உருபா அல்லது அதற்குமேல் அளிப்பவர்கள் வாழ்நாள் உறுப்பினர்களாகவும் ஆண்டுக்கு ஐந்து உருபா அளிப்பவர்கள் நன்கொடை உறுப்பினர்களாகவும் ஆண்டுக்கு ஓர் உருபா அளிப்பவர்கள் அடிப்படை உறுப்பினர்களாகவும் ஏற்றுக்கொள்ளப்படுவர். நன்கொடை உறுப்பினர்களும் அடிப்படை உறுப்பினர்களும் ஒவ்வோராண்டும் திசம்பர் 31ஆம் நாளுடன் முடியும் ஆண்டுக்கு, தொடர்புடைய கிளையிடம் உறுப்பினர் கட்டணம் அளிக்கவேண்டும். கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் உறுப்பினர் கட்டணம் முழுவதையும் தலைமைக் கழகத்திற்கு விடுத்தல் வேண்டும். எவரும் ஒரு கிளைக்கு மேற்பட்ட கிளைகளில் உறுப்பினராக இணையக் கூடாது. முகவரி மாற்றம் இருப்பின் உடன் தொடர்புடைய கிளையிடம் அறிவிக்கவும்.



5. கிளைகளும் அமைப்புமுறையும்

(1) கிளை

கிளையில் குறைந்தது பத்துப் பேர் உறுப்பினராக இருத்தல் வேண்டும். தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவர் அதிகார உறுப்பினராக இருத்தல் வேண்டும். கிளைகள் இயங்க வேண்டிய தேவைகளுக்குப் பொறுப்பாளர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

(2) தலைமைக் கழகம்

தலைவர், துணைத்தலைவர், பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் தலைமைக் கழகப் பொறுப்பாளராக இடம் பெறுவர்.

6. ஆட்சியாண்டு

சனவரி முதல் திசம்பர் முடிய.

7. பதவிக்காலம்

(1) கிளைக்கழகப் பொறுப்பாளர்களின் பதவிக்காலம் ஓராண்டாகும்.

(2) தலைமைக்கழகப் பொறுப்பாளர்களின் பதவிக் காலம் மூன்றாண்டாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



8. **தேர்தல்முறை**

(1) கிளைக்கழகப் பொறுப்பாளர்கள் அவ்வக்கிளை உறுப்பினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(2) தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் கிளைக் கழகங்களின் தலைவர் செயலாளர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

9. **பொறுப்புகள்**

(அ) **தலைவர்**

கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார்.

(ஆ) **துணைத்தலைவர்**

தலைவர் வாராக் காலத்தில் தலைவர்க்கான பணியை ஏற்பார்.

(இ) **பொதுச்செயலாளர்**

(1) தலைமைக் கழகக் கூட்டத்தை ஆண்டுக்கு இரு முறை கூட்டுதல்.

(2) இயக்கத்தின் சட்டப்படியான அலுவல்கள், ஆவணங்கள், ஒப்பந்தங்கள் அனைத்தையும் தம் பதவிப் பெயராலேயே மேற்கொள்ளுதல்.

(3) தலைவரின் இசைவோடு இன்றியமையாச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

(ஈ) **துணைப் பொதுச்செயலாளர்**

பொதுச்செயலாளர் வாராக் காலத்தில் தலைவரின் இசைவோடு பொதுச்செயலாளர் பணியை மேற்கொள்ளுதல்.

(உ) **பொருளாளர்**

கிளைக்கழக, தலைமைக்கழகப் பொறுப்பாளர்கள் முடிவுப்படி, கழகத்திற்குரிய தொகையைத் திரட்டிச் சான்றுகளுடன் வரவு செலவுக் கணக்கு வைத்தல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்